| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**<br>**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017** | |

| | | |
|---|---|---|
| **தரம் :- 10** | **கிறிஸ்தவம் (NRC) - I** | **நேரம்:- 3 மணித்தியாலம்** |

**சுட்டெண்:- ……………………..**

## பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01) "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் ……………………" என முன்னுரைத்தவர்.
1. மலாக்கி 2. எசாயா 3. எரேமியா 4. மீக்கா

02) இறைவனால் அழைக்கப்பட்டு இறை ஏவுதலால் வெளிப்படுத்தப்பட்ட இறை செய்தியை மக்களுக்கு அறிவிப்பவர்கள்.
1. அப்போஸ்தலர் 2. குருக்கள் 3. இறைவாக்கினர் 4. திருத்தூதர்

03) இயேசுவின் சேவகத் தன்மையைக் குறித்து எத்தியோப்பிய நிதி அமைச்சருக்கு பிலிப்பு விளக்கியதைக் குறிக்கும் திருமறைப் பகுதி எடுத்தக் காட்டுவன.
1. அன்பு 2. மன்னிப்பு 3. தியாகம் 4. தாழ்மை

04) இயேசு என்னும் பெயரின் பொருள்.
1. கடவுள் விடுவிக்கிறார் 2. அருட்பொழிவு செய்யப்பட்டவர்
3. கடவுள் கேட்கின்றவர் 4. அபிசேகம் செய்யப்பட்டவர்.

05) "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் ………………" என தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு மரியாவை வாழ்த்தியவர்.
1. செக்கரியா 2. எலிசபெத் 3. சிமியோன் 4. அன்னா

06) பாலன் இயேசுவை எருசலேம் கோவிலில் மெசியாவாக இனங் கண்டவர்.
1. செக்கிரியா 2. மரியா 3. எலிசபெத் 4. சிமியோன்

07) கோணலானது நேராக்கப்படும் கரடுமுரடானவை சமதளமாக்கப்படும் என யோவானின் பணி குறித்து முன்னுரைத்த இறைவாக்கினர்.
1. மீக்கா 2. மலாக்கி 3. எரேமியா 4. எசாயா

08) மக்களை மனந்திரும்பச் செய்யும் பணியில் தனது குமாரன் ஈடுபடுவார் என தனது புகழ்ப்பாடலில் கூறியவர்.
1. யோசேப்பு 2. மரியா 3. செக்கரியா 4. எலிசபெத்

09) இஸ்ரேயலரின் முதற்பேறுகள் இறைவனால் பாதுகாக்கப்பட்டதை நினைவு கூறும் வகையில் கடைப்பிடிக்கப்படும் சடங்கு.
1. பாஸ்கா 2. தலைமகன் அர்ப்பணம்
3. விருத்தசேதனம் 4. திருமுழுக்கு

10) “நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்” என இயேசு யாரைப் பார்த்துக் கூறினார்?
1. மரியாள் 2. மார்த்தாள் 3. அன்னாள் 4. சமாரியப்பெண்

11) இயேசு தனது பணியைக் குறித்து முன் அறிவிப்பினை வெளிப்படுத்தியது.
1. நாசரேத்து தொழுகைக்கூடத்தில் 2. எருசலேம் தொழுகைக்கூடத்தில்
3. சீடர்களைத் தெரிவு செய்த போது 4. தோற்றம் மாறுதலின் போது

12) திருமுழுக்கு யோவானின் போதனையின் மையமாக விளங்கியது,
1. மன்னிப்பு 2. மனந்திரும்புதல் 3. இறையரசு 4. விசுவாசம்

13) யூதர்கள் கடவுளுடன் நித்தியமாக இணைக்கப்பட்டவர்கள் என்ற அடையாளத்துடன் தொடர்புடைய சடங்கு.
1. திருமுழுக்கு 2. தலைமகள் அர்ப்பணம்
3. பாஸ்கா 4. விருத்த சேதனம்

14) “ஆண்டவரே நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய் விடும்.” என இயேசுவை வேண்டிக் கொண்டவர்.
1. சக்கேயு 2. சமாரியப்பெண்
3. தூற்றுவர் தலைவன் 4. சீமோன் பேதுரு

15) இயேசு எருசலேமுக்கு கழுதையில் பவனியாகச் சென்றார். கழுதை எதன் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது?
1. பொறுமை 2. வீரம் 3. தாழ்மை 4. உழைப்பு

16) நியாயப் பிரமாணத்தில் முதன்மையானவராக யூதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்.
1. எலியா 2. எசாயா 3. மோசே 4. ஆபிரகாம்

17) இயேசு மக்களுக்கு தம் தாயும் சகோதரர்களும் யார் எனக் கூறினார்?
1. இறைவார்த்தையைக் கேட்பவர்கள்
2. இறைவார்த்தையின் படி செயற்படுபவர்கள்
3. இறைவார்த்தையை போதிப்பவர்கள்
4. இறைவார்த்தையை அறிந்தவர்கள்

18) எலிசாவால் குணமாக்கப்பட்ட புறவினத்தவர்.
1. நாமான் 2. சாரிபாத் கைம்பெண்
3. சமாரியப் பெண் 4. பாத்திமேயு

19) கடவுள் உலகைப் படைத்து மனிதனிடம் ஒப்படைத்ததற்கு உதாரணமாகக் கூறப்பட்ட உவமை.
1. கடுகு விதை உவமை
2. திராட்சைத்தோட்ட குத்தகைக்காரர் உவமை
3. புளிப்பு மா உவமை
4. காணாமற் போன மகன் பற்றிய உவமை.

20) நாம் சோதனைக்குட்படாமலிருக்க என்ன செய்ய வேண்டும்.
1. வேதம் வாசித்தல் வேண்டும் 2. விழித்திருந்து செபம் செய்ய வேண்டும்
3. ஆலயத்திற்கு செல்ல வேண்டும் 4. உபவாசமிருக்க வேண்டும்.

The National e-learning Portal for The General Education

21) இறைவாக்கினர் அன்னா பற்றிய சரியான கூற்றக்களாக அமைவது,

A. திருக்கோயில் எப்போதும் மன்றாடிக் கொண்டிருந்தவர்.

B. தாழ்மையும் நம்பிக்கையும் நிறைந்தவர்

C. தூய ஆவியால் நிறைந்தவர்

D. நோன்பு நோற்றால் மூலம் கடவுளுடன் தொடர்பு கொண்டிருந்தவர்.

1. A யும் B யும்
2. A யும் C யும்
3. A யும் D யும்
4. B யும் C யும்

22) "முழு இஸ்ரேல் மக்களிடத்திலும் நான் இவ்வாறான விசுவாசத்தைக் காணவில்லை" இப்படிப்பட்ட உறுதியான விசுவாசத்தை இயேசு கண்டது,

1. முடக்குவாதமுற்றவரிடம்
2. நூற்றுக்கதிபதியிடம்
3. பாவியான பெண்ணிடம்
4. பார்வையற்றவரிடம்.

23) A. நீங்கள் எவரையும் அச்சுறுத்தி பணம் பறிக்காதீர்கள்

B. உங்களுக்க குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்

C. எவர் மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர்கள்

திருமுழுக்கு யோவான் உரோமப் படைவீரர்களுக்க வழங்கிய அறிவுரைகளாவன.

1. A B
2. A C
3. B C
4. A B C

24) இறுதி இராவுணவின் பின் இயேசு தனது சீடர்களோடு சென்ற இடம்.

1. ஒலிவ மலை
2. சீனாய் மலை
3. எருசலேம் ஆலயம்
4. நாசரேத்து ஆலயம்

25) A. வேலையாட்களை அனுப்பும் படி மன்றாடுதல்.

B. பேய்களை அடக்கவும் பிணிகளைப் போக்கவும் அதிகாரம் பெற்றிருத்தல்

C. வீடுகளுக்கு அமைதியை வாழ்த்தாகக் கூறுதல்.

D. இறையரசை அறிவித்தல்

இயேசு எழுபது பேரை பணிக்கு அனுப்பும் போது கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள்

1. A B C
2. B C D
3. A D
4. A C

26) கெத்சமனே ஜெபத்தின் மையக்கருத்து.

1. இறை சித்தம்
2. இறையாசி
3. இறையரசு
4. விசுவாசம்

27) "என் இல்லம் இறைவேண்டலின் வீடு. நீங்களோ இதைக் கள்வர் குகையாக்கினீர்கள்" எனக் கூறப்பட்ட இடம்.

1. சத்தேயுவின் வீடு
2. பரிசேயர் தலைவன் ஒருவனின் வீடு
3. எருசலேம் ஆலயம்
4. நாசரேத்தூர் ஆலயம்

28) சனகரீம் என்பதன் பொருள்.

1. யூத நீதிச்சட்டம்
2. யூத நீதிமன்றம்
3. பரிசுத்தம்
4. ஆண்டவரின் கொடை

29) தலைமைக் குருக்கள் பதவிக்கு எந்தக் குழுவினரிடமிருந்து தெரிவு செய்யப்பட்டனர்?

1. பரிசேயர்
2. சதுசேயர்
3. ஏரோதியர்
4. செலோத்தியர்

30) இயற்கை நியதிகளுக்கு மேலான அற்புதச் செயல்களாக நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவை.
1. 03 2. 04 3. 05 4. 20

31) மரணத்துக்கேதுவான ஒரு குற்றத்தையும் இயேசுவில் காணவில்லை எனக்கூறியவர்.
1. அன்னா 2. காய்பா 3. ஏரோது 4. பிலாத்து

32) உயிரோடிக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன, எனக்கூறியவர்.
1. மார்த்தாள் 2. மகதலாமரியாள் 3. தோமா 4. இரு தூதர்கள்

33) இறையசிற்குள் பிரவேசிக்க முடியாதவர்களாக இயேசுவால் குறிப்பிடப்படுபவர்கள்.
1. ஏழைகள் 2. கைம்பெண்கள் 3. செல்வந்தர் 4. அநாதைகள்

34) "நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற் கொள்ளும்" என இயேசுவை வேண்டியவர்.
1. படைவீரரில் ஒருவன் 2. கள்வர்களில் ஒருவன்
3. நூற்றுவர் தலைவன் 4. முடக்குவாதமுற்றவர்

35) ஆண்டவராகிய இயேசுவின் போதனையின் மையக்கருத்து.
1. இறையரசு 2. மன்னிப்பு 3. விசுவாசம் 4. மனந்திரும்புதல்

36) "எமக்கு அயலார் யார்? என்ற திருச்சட்ட அறிஞரின் கேள்விக்கு இயேசு கூறிய உவமை.
1. பெரிய விருந்து உவமை 2. மன்னிக்க மறுத்த பணியாள் உவமை
3. நல்ல சமாரியன் உவமை 4. விதைப்பவன் உவமை

37) உயிர்த்த இயேசு சீடர்கள் மத்தியில் தோன்றிய போது கூறியது,
1. விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் 2. கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை
3. உங்களுக்கு அமைதி உரித்தாகுக 4. உங்கள் மன்றாட்டு கேட்கப்பட்டது.

38) பத்துத் தொழுநோய்கள் குணமாக்கப்பட்ட அற்புதத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படும் முக்கிய பண்பு.
1. மன்னிப்பு 2. நன்றியுணர்வு 3. விசுவாசம் 4. கீழ்ப்படிவு

39) இயேசு பரிசேயர் ஒருவரின் வீட்டில் உணவருந்திய சந்தர்ப்பத்தில் கூறிய உவமை.
1. கடுகு விதை உவமை 2. புளிப்பு மா உவமை
3. நல்ல சமாரியன் உவமை 4. பெரிய விருந்து உவமை.

40) கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பாக அமைவது,
1. இறையரசை உரிமையாக்கிக் கொள்வது
2. அறிவைப் பெற்றுக் கொள்வது
3. நற்கிரியைகளை மேற்கொள்வது
4. பணம் சம்பாதிப்பது.

(40 x 1 = 40 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**<br>**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017** | |
| **தரம் :- 10** | **கிறிஸ்தவம் (NRC) - II** | |

### பகுதி - II

❖ **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01.**

1. திருமுழுக்கு யோவானின் பணி குறித்து முன்னுரைத்த இறைவாக்கினர் இருவரைக் குறிப்பிடுக.
2. பாலன் இயேசுவை எருசலேம் கோவிலில் மெசியாவாக இனங்கண்டு கொண்ட இருவரையும் குறிப்பிடுக.
3. திருமுழுக்கு யோவானின் காலத்தில் யூதர்களின் தலைமைக் குருவாக கடமையாற்றிய இருவரும் யார்?
4. இயேசுவின் சார்பாக அவரின் பெற்றோர் நிறைவேற்றிய யூத சமய சம்பிரதாயங்கள் இரண்டு தருக.
5. இயேசுவின் திருமுழுக்கின் போது இடம் பெற்ற புதுமை நிகழ்வுகள் இரண்டு தருக.
6. பேறுபெற்றோர் என இயேசுவால் குறிப்பிடப்பட்ட இரு பிரிவினரைத் தருக.
7. இயேசுவால் ஓய்வு நாளில் குணமாக்கப்பட்ட இருவரைக் குறிப்பிடுக.
8. இயேசுவின் பாடுகளுடன் தொடர்புபட்ட இருவரைக் குறிப்பிடுக.
9. இயேசு சிலுவையில் மரிக்கும் வேளையில் இடம் பெற்ற இரு சம்பவங்களைக் குறிப்பிடுக.
10. இறையரசின் கொள்கைகள்? அபிலாசைகளை வெளிப்படுத்தும் உவமைகள் இரண்டு தருக.

(2 x 10 = 20 புள்ளிகள் )

**02.**

1. இயேசு தொழுகைக்கூடத்தில் வாசித்த எசாயா சுருளோட்டை கிறிஸ்தவர்கள் எவ்வாறு அழைத்தனர்?
2. அப்பகுதியில் அடங்கியுள்ள முக்கிய விடயங்கள் மூன்று தருக.
3. அவ்விடயங்களின் மூலம் நீர் கற்றுக் கொள்ளும் படிப்பினைகள் எவை?

(2+3+5 = 10 புள்ளிகள் )

**03.**

1. இயேசு தனது முதல் சீடர்களை எங்கு தெரிவு செய்தார்?
2. இயேசு பன்னிரு சீடர்களையும் சிறப்புப் பணிக்கெனத் தெரிவு செய்ய முன் மேற்கொண்ட நடவடிக்கை என்ன?
3. இயேசு பன்னிரு சீடர்களை பணிக்கு அனுப்பும் போது அவர்களுக்கு கொடுத்த அறிவுரைகளைத் தருக.

(2+3+5 = 10 புள்ளிகள் )

**04.**

1. சதுசேயர் என்னும் சமயக்குழுவினரிடம் காணப்படட முக்கிய பண்புகள் இரண்டு தருக.
2. இயேசுவிடம் குற்றம் கண்டு பிடிக்கும் நோக்கில் சதுசேயரால் கேட்கப்பட்ட மூன்று கேள்விகளும் எவை?
3. இயேசுவின் வாழ்விலிருந்து நீர் கற்றுக் கொண்ட முன்மாதிரியான பண்புகள் ஐந்து தருக.

(2+3+5 = 10 புள்ளிகள் )

**05.**

1. யூத சமூகத்தில் ஒதுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட பிரிவினர் இருவரைக் குறிப்பிடுக.
2. இயேசு ஒதுக்கப்பட்டவர்களை நேசித்த சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
3. எமது சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் சார்பாக நீர் ஆற்றக்கூடிய பணிகள் ஐந்து தருக.

(2+3+5 = 10 புள்ளிகள் )

**06.**

1. இறையரசு என்ற பதத்தில் உள்ளடங்கியுள்ள உலக அரசில் காணப்படும் தன்மைகள் எவை?
2. இறையரசின் வளர்ச்சி பற்றி கூறுவதற்கு இயேசு பயன்படுத்திய உவமைகள் மூன்று தருக.
3. இறையரசின் பிரசைகளிடம் காணப்பட வேண்டிய குணாதிசயங்கள் ஐந்து தருக.

(2+3+5 = 10 புள்ளிகள் )

**07.** பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. இயேசு அலகையினால் சோதிக்கப்படல்
2. சக்கேயுவின் மனமாற்றம்
3. இயேசுவின் தோற்றம் மாறுதல்
4. இறையரசின் அடையாளமும் அற்புதங்களும்.

(10 புள்ளிகள் )

The National e-Learning Portal for the General Education